DEPOSITION OF WITNESS Crl.Misc.39
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE SPECIAL COURT OF SESSIONS JUDGE, NAMAKKAL.

Special Court for SC/ST Cases, Namakkal.

Sessions Case No. 1/2017

Deposition of Witness for PW.5

| | | |
|---|---|---|
| Name | : | திரு. குருசாமி |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 27.08.2019

முதல் விசாரணை -

நான் பரமத்தி வேலூர் வட்டம், பிலிக்கல்பாளையம் மல்லிகாபுரம் காலனியில் வசித்து ருகின்றேன். நான் கூலி வேலை செய்து வருகின்றேன். கடந்த 05.03.2016 ம் தேதி காலை 07.00 மணியளவில் எனது தகப்பனார் கண்ணையன் செல்லிருந்து எனக்கு போன் வந்தது. எதிரி ராமசாமி எனது தகப்பனாரை அடித்துவிட்டதாக போன் வந்தது. அதைக் கேட்டு நான் பிலிக்கல்பாளையம் காவியா பேக்கரி அருகே சென்று என்ன நடந்தது என்று எனது தகப்பனாரை விசாரிக்கும்போது ராமசாமி அடித்துவிட்டதாக கூறினார். உடனே நான் வீட்டிற்கு எனது தகப்பனாரை அழைத்துச் சென்று தண்ணீர் கொடுத்து ஆசுவாசப்படுத்தினேன். வலி இருப்பதாக சொன்னதால் எனது தகப்பனாரை வேலூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சை அழைத்துச் சென்றேன். அங்கு சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டார். என்னை காவல் துணைக் கண்காணிப்பாளர் 10.03.2016 ல் விசாரித்தார்.

எதிரிகள் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் குறுக்கு விசாரணை -

நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல், சொன்ன மாதிரி, சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் எனது தகப்பனாரை எதிரி ராமசாமிஅடிக்கவில்லையென்றால் சரியல்ல. எனது அப்பா தான் எதிரி ராமசாமியை அடித்து காயப்படுத்தினார் என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை.

DEPOSITION OF WITNESS Crl.Misc.39
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE SPECIAL COURT OF SESSIONS JUDGE, NAMAKKAL.

Special Court for SC/ST Cases, Namakkal.

Sessions Case No. 1/2017

Deposition of Witness for PW.6

| | | |
|---|---|---|
| Name | : | திரு. தனசேகர் |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 27.08.2019

முதல் விசாரணை -

நான் பரமத்தி வேலூர் வட்டம், ஆனங்கூர் காட்டு வலவில் வசித்து வருகின்றேன். நான் விவசாயக் கூலி வேலை செய்து வருகின்றேன். டாக்டர் ஏ.பி. கணேசனுக்கு சொந்தமான தோட்டத்தை குத்தகைக்கு எடுத்து அதில் கரும்பு பயிரிட்டேன். அதில் விளைந்த கரும்புகளை வெட்டித் தருமாறு சாட்சி கண்ணையனை கேட்டுக்கொண்டேன். அதில் கண்ணையன் விளைந்த கரும்புகளை வெட்டிவிட்டு சுமார் 15 சென்ட் இடத்தில் கரும்புகளை வெட்டாமல் விட்டுவிட்டார். ஆகவே, எதிரி ராமசாமியை கண்ணையன் விட்டுச் சென்ற 15 சென்ட் இடத்தில் விளைந்த கரும்புகளை வெட்டுமாறு கேட்டேன். அதன் படி எதிரி ராமசாமி எனது 15 சென்ட் கரும்புகளை வெட்டிக்கொடுத்தார். காவல் துணைக் கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -

கண்ணையன் வெட்டிச் சென்ற கரும்புகளுக்கு விலை எதுவும் தரவில்லை. அதனால் தான் எதிரி ராமசாமியை 15 சென்ட் இடத்தில் உள்ள கரும்புகளை வெட்டித் தருமாறு நான் கேட்டேன்.

மறு விசாரணை - இல்லை.

DEPOSITION OF WITNESS Crl.Misc.39

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE SPECIAL COURT OF SESSIONS JUDGE, NAMAKKAL.

Special Court for SC/ST Cases, Namakkal.

Sessions Case No. 1/2017

Deposition of Witness for PW.7

| | | |
|---|---|---|
| Name | : | திரு. செல்வக்குமார் |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 27.08.2019

முதல் விசாரணை -

நான் பரமத்தி வேலூர் வட்டம், பிலிக்கல்பாளையம் மல்லிகாபுரம் காலனியில் வசித்து வருகின்றேன். நான் கூலி வேலை செய்து வருகின்றேன். கடந்த 10.03.2016ம் தேதி பிலிக்கல்பாளையம் காவியா பேக்கரியில் டீ சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். அங்கு காவல் துணைக் கண்காணிப்பாளர் அவர்கள் வந்து அந்த இடத்தை பார்வையிட்டு படம் வரைந்தார்கள். அதை என்னிடம் படித்துக் காண்பித்தார். நானும், வீராசாமி அதில் சாட்சி கையொப்பம் செய்தோம். பார்வை மகசரில் உள்ள சாட்சி முதல் கையொப்பம் என்னுடையதுதான். அது அ.சா.ஆ.3.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -

எதிரி ராமசாமி கொடுத்த புகாரின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட வழக்கில் நான் பார்வை மகசர் சாட்சியாக கையொப்பம் பேட்டேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை.